# கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார். நீ கீழாகாமல், மேலாவாய். உபா 28 : 9

**உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ உன்னை அனுப்புகிறவர் கர்த்தர்**

தேவனால் அழைக்கப்பட்டும், உறுதியாக்கப்படும், மீண்டும் மீண்டும் பின்வாங்கிக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடேபோ**

எப்படி நான் போவேன் ? எப்படி நான் விட்டுச் செல்வேன், என் பெற்றோரை பார்ப்பது யார் ? என் குடும்பத்தை கவனிப்பது யார் ? பணம் எங்கே இருந்து வரும் ? என கேள்விக்கு மேல், கேள்வி கேட்டுக் கொண்டிருக்கும் சகோதரியே,

**உனக்கு இருக்கும் இந்த பலம் போதும்,**
**இப்பொழுதுள்ள சூழ்நிலை உன் குடும்பத்துக்கும் போதும்.**

உன் குடும்பத்தை நீ சுமப்பது போல நினைத்துக் கொள்கிறாய் நீதான் பாதுகாவல் என கற்பனை செய்கிறாய். சகலமும் உன்னுடைய ஞானம் என நினைக்கிறாய்.

**"இல்லவே இல்லை" ஆதலால் "உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ"**

உன் உள்ளத்தின் ஆழத்தில் அசையாத ஒரு நம்பிக்கை வேண்டும். என்னவெனில் **"என்னை அனுப்புகிறவர் கர்த்தர்"** சகோதரியே, சகோதரனே

"உன்னை அனுப்புகிறவர்"–கர்த்தர் ஆதலால், ஒரு மனுஷனை முறியடிப்பதுபோல நீ . . . . . . முறியடிப்பாய் . . . .

என் குடும்பம் மிகவும் எளியது. என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறிவன்–என்று இனிமேல் நீ சொல்லாதே. ஏனெனில்

**"உலகத்தில் இருக்கிறவனிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவர்"அவர் உங்களைப் பார்த்துச் சொல்கிறார். "உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ"–**என்பதாக.

அவர் சத்தத்துக்கு உண்மையாய் செவிகொடுப்பாயானால்

**கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார் நீ கீழாகாமல், மேலாவாய்– அல்லேலூயா**

ஊழியத்திலே உனக்கு ஒரு உயர்வு இருக்கிறது.
ஊதியத்திலும் உனக்கு ஒரு உயர்வு இருக்கிறது.

உன்னுடைய பலத்தை நம்பாதே
உன்னை அனுப்புகிறவரை நம்பு
உன்னுடைய உழைப்பை நம்பாதே
உன்னை அழைத்தவரை நம்பு

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

இந்த மாதத்திலே அடிக்கடி **"எனக்கு இருக்கிற இந்த பலம் போதும்"** என்ற வார்த்தையை உபயோகியுங்கள். ஏனெனில்

**என்னை அனுப்புகிறவர் கர்த்தர்**
**என்னை தெரிந்தெடுத்தவர் கர்த்தர்**
**என்னை அழைத்தவர் கர்த்தர்**
**என்னை பரிசுத்தமாக்கினவர் கர்த்தர்**
**என்னை மேன்மைபடுத்தினவர் கர்த்தர்**

என அறிக்கையிடுங்கள்.

இப்பொழுது உள்ள வளர்ச்சியை சிந்தித்துப்பார். ஆனால் சில வருடங்களுக்கு முன்பு எங்கே இருந்தாய் ? எப்படி இருந்தாய் ? இப்படி வருவோம் என நினைத்தாயா ?

**அதுபோல் தான் இன்றும்**

இன்று பலன் குன்றிப் போய், குறுகிப்போனது போல் தெரிகிறது. பல ஆண்டுகளுக்குப்பின் நீ எப்படியிருப்பாய் என விசுவாசத்தில் கற்பனை செய்து பார்.

**கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார்**
**நீ கீழாகாமல், மேலாவாய்**
**ஆதலால் உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ**
**உன்னை அனுப்புகிறவர் கர்த்தர். ஆமென்.**